**07.11.2022**

## 11. பகையா? நம் அன்பில் 'ஒரு முடி அளவு' சேதமும் ஏற்படாது!

இயேசு கூறியதுபோல், சிநேகிதரால் காட்டிக்கொடுக்கப்பட்டு.... எல்லாராலும் பகைக்கப்படும் வேளையில், தெய்வ அன்பு குன்றிவிடக்கூடாதே என, வாஞ்சிப்போர் பாக்கியவான்கள்! ஏனெனில், அவர்களுக்கு இயேசு ஓர் அற்புத வாக்கு அளித்துள்ளார்! ஆம், நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்! "ஆனாலும், உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது!" என்ற வாக்குதத்தமே ஆகும்! அதாவது, உங்களின் தெய்வ அன்பில் 'ஒரு முடி அளவுகூட' சேதமடையாது என்ற வாக்குதத்தம்! இவ்வாறாக, உங்கள் விசுவாசத்தோடு கூடிய பொறுமையினால் வாக்குதத்தத்தை சுதந்தரித்து, உங்கள் ஆத்துமாக்களை காத்துக்கொள்ளுங்கள்! என ஆண்டவர் இயேசு அருளித்தந்த 'தேவ அன்பின்' பாதுகாப்பு விலையேறப் பெற்றதன்றோ? (லூக்கா 21:16-19).

'அன்பில் முடிவுபரியந்தம் நிலைநிற்கத் தடுமாறும்' இக்கொடிய காலத்தில், நாமோ அன்பு தணியாது வாழ்வதுபோன்ற மகிழ்ச்சியே, நித்திய மகிழ்ச்சியாகும்!

– ரத்னம்